**ROLL NUMBER**

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

**CODE - 006**

# நடுவண் இடைநிலைக் கல்வி வாரியம்
# பாடத்திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது
# (மாற்றத்திற்கு உட்பட்டது) ★
# மாதிரிவினாத்தாள் 2020 – 2021
# பத்தாம் வகுப்பு - தமிழ்

**Max . Marks : 80** — **Time Allowed : 3Hours**

**மொ.மதிப்பெண்கள் : 80** — **கால அளவு : 3மணி**

**The question paper is divided into four section**
**இக்கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| **SECTION:** | **A** | **Reading comprehension** | - | **20 Marks** |
| **பிரிவு :** | **அ** | **படித்தல் (உரைநடைப் பகுதி)** | - | **20 மதிப்பெண்கள்** |
| **SECTION:** | **B** | **Writing** | - | **22 Marks** |
| **பிரிவு:** | **ஆ** | **எழுதுதல்** | - | **22 மதிப்பெண்கள்** |
| **SECTION:** | **C** | **Grammar** | - | **16 Marks** |
| **பிரிவு:** | **இ** | **இலக்கணம்** | - | **16 மதிப்பெண்கள்** |
| **SECTION:** | **D** | **Literature/ Text Books** | - | **22 Marks** |
| **பிரிவு:** | **ஈ** | **இலக்கியம்:.தமிழ்ப்பாடநூல்கள்** | - | **22 மதிப்பெண்கள்** |

---

* **அனைத்து வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்**
* **ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

## பிரிவு – அ படித்தல் (SECTION A, 20 MARKS)

**1.** (அ) பின்வரும் பத்தியைப் படிக்க அதையடுத்து வரும் பல் வினா விடைகளுக்கு சரியான விடையளிக்க (5)

தமிழ்நாட்டில் குடவோலை முறை பற்றிய செய்திகள் பாண்டிய நாட்டிலேயே முதலில் கிடைக்கப் பெற்றுள்ளன. கி பி 800 நூற்றாண்டிலேயே திருநெல்வேலி மானூரில் கண்டுபிடிக்கபட்ட மாறன் சடையனின் கல்வெட்டு ஒன்று பாண்டிய நாட்டுக் கிராமங்களில் குடவோலை வழக்கத்தில் இருந்ததாகக் கூறுகின்றது உத்திரமேரூரில் முதல் பராந்தகன் சோழன் காலத்தில் வைகுந்தப் பெருமாள் கோவில் கல்வெட்டு கி பி 919/921 இல் வரையப் பெற்று உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்தில் கிராம நிர்வாகம் குடவோலை முறைப்படி நடைபெற்று வந்ததை உறுதி செய்கின்றது. ஆக குடவோலை முறை ராசராச சோழன் காலத்திற்கு முன்பே இருந்து வந்தது தெளிவாக விளங்குகிறது.

**வினாக்கள்.**

1. குடவோலை முறைபற்றிய செய்திகள் முதன் முதலில் எந்த நாட்டில் கிடைக்கப்பெற்றன ?

   அ) சோழநாட்டில் ஆ) பாண்டியநாட்டில்

   இ) சேரநாட்டில் ஈ) தமிழ்நாட்டில்

2. மாறன் சடையனின் காலத்தில் குடவோலை முறை இருந்தது என்பதை உறுதி படுத்துவது எது ?

   அ) ஓலைச்சுவடி ஆ) செப்பேடு

   இ) கல்வெட்டு ஈ) செவிவழிச்செய்தி

3. உத்திரமேரூர் யாருடைய ஆட்சியின் கீழ் இருந்தது ?

   அ) சோழர்கள் ஆ) பல்லவர்கள்

   இ) பாண்டியர்கள் ஈ) சேரர்கள்

4. எதன் சுவரில் குடவோலை பற்றிய செய்திகள் கிடைக்கப்படுகிறது ?

   அ) அரண்மனை ஆ) கோவில்

   இ) வீட்டில் ஈ) அரங்கின்

5. தொல்காப்பியம் எத்தகைய மகளிர்களைக் காட்டுகிறது ?

   அ) மறவ மகளிர்களை ஆ) நல்ல மகளிர்களை

   இ) ஆடல் மகளிர்களை ஈ) வீரமகளிர்களை

**(அல்லது)**

(ஆ)

தேவநேயப் பாவாணர் மிகச்சிறந்த தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார். இவர் நாற்பதுக்கும் மேலான மொழிகளின் சொல் இயல்புகளைக் கற்று மிக அரிய சிறப்புடன் சொல்லாராய்ச்சிகள் செய்துள்ளார். மறைமலை அடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இயக்கத்திற்கு அடிமரமாய் ஆழ்வேராய் இருந்து சிறப்பாக உழைத்தார். இவருடைய ஒப்பரிய தமிழறிவும் பன்மொழியியல் அறிவும் கருதி, சிறப்பாக மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் என்று அழைக்கப்பட்டார். தமிழ் உலக மொழிகளில் மூத்ததும் மிகத்தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது எனவும்; திராவிடத்திற்குத் தாயாகவும் ஆரியத்திற்கு மூலமாகவும் விளங்கிய மொழியென வாதிட்டவர். கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் உள்ளிட்டவைகளுக்குத் தன் சொற்கள் பலவற்றை அளித்தது என்று நிறுவியவர் பாவாணர் ஆவார். தமிழின் வேர்ச்சொல் வளத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டி, அதன் வளர்ச்சிக்கான வழியையும் அவரின் நூல்களின் வழி உலகிற்கு எடுத்து இயம்பினார்.

**வினாக்கள்**

1. பாவாணர் எதில் வல்லுநராகத் திகழ்ந்தார்?

   அ) சொல்லராய்ச்சியில் ஆ) மொழியாராய்ச்சியில்

   இ) தமிழாராய்ச்சியில் ஈ) இலக்கிய ஆராய்ச்சியில்

2. பாவாணர் எத்தனை மொழிகளின் மொழி இயல்புகளைக் கற்றறிந்தார்?

   அ) 20 ஆ) 30

   இ) 40 ஈ) 50

3. பாவாணர் யாருடைய வழியில் நின்று பணியாற்றினார் ?

   அ) திருவிகாவின் வழியில் ஆ) தந்தையின் வழியில்

   இ) வரதராசனாரின் வழியில் ஈ) மறைமலை அடிகள்

4. எத்தகைய தமிழறிவை பெற்றிருந்தார்?

   அ) அளப்பரிய அறிவு ஆ) ஒப்பரிய அறிவு

   இ) சிறப்பான அறிவு ஈ) நுட்பமான அறிவு

5. ஆரியத்திற்கு மூலமாக இருப்பது எது?

   அ) திராவிடம் ஆ) வடமொழி

   இ) தமிழ் ஈ) சமற்கிருதம்

**2. (அ) பின்வரும் பத்தியைப் படிக்க அதையடுத்து வரும் பல் வினா விடைகளுக்கு சரியான விடையளிக்க** (5)

தமிழில் சிற்றிலக்கியம் தோன்றி வளர்ந்த வரலாற்றினை முன் வைக்கும் முனைவர் ந.வீ.ஜெயராமன் “தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் கோவையாகிச் செடியாகி, எட்டாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து,பதினோராம் நூற்றாண்டில் சதகமாகவும், பரணியாகவும் அரும்பி, பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழாக மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து, பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது” என்று குறிப்பிடுகிறார்.

**வினாக்கள்.**

1. தமிழில் தோன்றி வளர்ந்த இலக்கியம் எது ?

   அ) அறஇலக்கியம் ஆ) காப்பிய இலக்கியம்

   இ) சங்க இலக்கியம் ஈ) சிற்றிலக்கியம்

2. சங்காலத்தில் முளைவிட்டது எது ?

அ) ஆற்றுப்படை ஆ) போர்ப்படை

இ) கல்விக்கொடை ஈ) பத்துப்படை

3. ஐந்தாம் நூற்றாண்டில் துளிர்த்தது எது ?

அ) அஜந்தா ஆ) அந்தாதி

இ) முந்தாதி ஈ) ஆதியந்தம்

4. கோவை எந்த நூற்றாண்டில் தோன்றியது ?

அ) ஐந்தாம் நூற்றாண்டு ஆ) ஆறாம் நூற்றாண்டு

இ) ஏழாம் நூற்றாண்டு ஈ) எட்டாம் நூற்றாண்டு

5. குறவஞ்சி தோன்றிய நூற்றாண்டு யாது ?

அ) பதினெட்டாம் நூற்றாண்டு ஆ) பத்தாம் நூற்றாண்டு

இ) இருபதாம் நூற்றாண்டு ஈ) ஒன்பதாம் நூற்றாண்டு

**(அல்லது)**

(ஆ)

சிரிப்பும் மகிழ்ச்சியும் கூடிய உணர்வை தூண்டும் கலைவடிவங்களை நகைச்சுவை எனலாம். நகைச்சுவை மன இறுக்கம் மன உளைச்சல் போன்றவற்றிலிருந்து மீண்டு ஆரோக்கியமான உடல் மன நிலையைப் பேண உதவும். நவரசங்களில் ஒன்றான நகைச்சுவை, ஒருவராலோ அல்லது குழுவினராலோ மேற்கொள்ளப்படும் சொல், செயல், காட்சி, நினைவூட்டல் மூலம் நகைச்சுவை உணர்வைத் தூண்டி மகிழ்ச்சியைப் பெருக்குகிறது. நகைச்சுவை ஆற்றலை குழந்தைகள் பெற்றோர் இடமிருந்து பிறந்த 16 மாதங்களிலேயே கற்றுக் கொள்கின்றனர். சொற்பொழிவுகளில் சில சொற்பொழிவாளர்கள் நகைச்சுவையான செய்திகளைச் சொல்வதுண்டு. நகைச்சுவை சொற்பொழிவாளர்களில் திருமுருக கிருபானந்த வாரியார் முக்கியமானவர் ஆவார். அவருடைய சொற்பொழிவுகள் ஆன்மீகச் சொற்பொழிவுகளாக இருப்பினும் அதையும் நகைச்சுவையாகச் சொல்லும் திறன் அவரிடம் அதிகமாக இருந்தது.

**வினாக்கள்**

1. சிரிப்பு என்பது யாது?

அ) உணர்வாகும் ஆ) அறிவாகும்

இ) புலனாகும் ஈ) கலையாகும்

2. நகைச்சுவை எத்தகைய மன நிலையைப் பேண உதவும்?

அ) மகிழ்ச்சியான மனநிலை ஆ) உணர்ச்சிகரமான மனநிலை

இ) ஆரோகியமான மனநிலை ஈ) இன்பமான மனநிலை

3. குழந்தைகள் நகைச்சவையை யாரிடம் இருந்து கற்று கொள்கின்றார்கள்?

அ) உறவினரிடம் இருந்து ஆ) பெற்றோரிடமிருந்து

இ) சமுதாயத்திடம் இருந்து ஈ) மருத்துவரிடமிருந்து

4. சொற்பொழிவாளர்கள் நகைச்சுவையான ....................ச் சொல்வதுண்டு.

அ) கதைகளை ஆ) துணுக்குகளை

இ) விடுகதைகளை ஈ) செய்திகளை

5. கிருபானந்த வாரியார் எத்தகைய செற்பொழிவாளர்?

அ) ஆன்மீக சொற்பொழிவாளர் ஆ) பட்டி மன்றசொற்பொழிவாளர்

இ) இலக்கிய சொற்பொழிவாளர் ஈ) இலக்கண சொற்பொழிவாளர்

**3. கீழ்க்காணும் பாடல் அடிகளைப்படிக்க. அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக (5)**

**முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்**
**மொத்த வணிகலமும் மேவலால் - நித்தம்**
**அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு**
**இணைகிடந்த தேதமிழ் ஈண்டு**

**வினாக்கள்**

1. இப்பாடலைப் பாடிய புலவர் யார்?

அ) தாயுமானவர் ஆ) காளமேகப் புலவர்

இ) புகழேந்தி ஈ) தமிழ்ழகனார்

2. தமிழ் எத்தனை சங்கங்களைக் கண்டது?

அ) நான்கு ஆ) மூன்று

இ) இரண்டு ஈ) ஐந்து

3. கடல் தருவன எவை?

அ) முத்தும் அமிழ்தும் ஆ) மீனும் உப்பும்

இ) பவளமும் முத்தும் ஈ) அலையும் மழையும்

4. சங்கத்தவர் யார்?

அ) சங்ககால அரசர் ஆ) வணிகர்

இ) சங்கப்புலவர் ஈ) வணிகர் சங்கம்

5. ஆழி - பொருள் கூறு

அ) மோதிரம் ஆ) கடல்

இ) முத்து ஈ) வைரம்

**4. பின்வரும் பத்தியைப் படிக்க அதையடுத்து வரும் பல் வினா விடைகளுக்கு சரியான விடையளிக்க (5)**

விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை . அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை, உண்டால் அம்ம, இவ்வுலகம் உன புறநானூறு குறிப்பிடுகிறது.

**வினாக்கள்:**

1. முன்பின் அறியாத புதியவர் யார்?

   அ) விருந்தினர் ஆ) புதியவர்

   இ) வழிப்போக்கர் ஈ) பயணி

2. தொல்காப்பியர் கூறுவது யாது?

   அ) மருந்தே புதுமை ஆ) விருந்தே புதுமை

   இ) இலக்கியமே புதுமை ஈ) இலக்கணமே புதுமை

3. தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை யாது?

   அ) விருந்து உண்பது ஆ) உணவளிப்பது

   இ) உண்ணாது இருத்தல் ஈ) தனித்து உண்ணாமை

4. நல்லோர் யார்?

   அ) வந்தவருக்கு விருந்தளிப்பவர்

   ஆ) அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர்

   இ) விருந்து முடிந்து செல்கையில் வழி உணவு கொடுப்பவர்

   ஈ) வந்தவருக்கு உண்ண உணவும் தங்க இடம் அளிப்பவர்

5. உண்டால் அம்ம, இவ்வுலகம் – இவ்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

அ) குறுந்தொகை ஆ) நற்றிணை

இ) திருக்குறள் ஈ) புறநானூறு

**பிரிவு –ஆ எழுதுதல் (SECTION B, 22 MARKS)**

5. **கடிதம் எழுதுக.**

உன் பகுதிக்குச் சாலை வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக (6)

**(அல்லது)**

கூகுள் நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்திருக்கும் உன் அண்ணனுக்கு வாழ்த்துக் கூறிக் கடிதம் எழுதக.

**(அல்லது)**

ஜெயமோகன் எழுதிய கொற்றவை மின்னூல் வேண்டி உன் நண்பனுக்கு மின்னஞ்சல் அனுப்புக

**{உன் கடித முகவரி: இளமாறன் / இளவஞ்சி, 185 சுடலைமாடன் தெரு, கபிலன் நகர், திருநெல்வேலி – 627 004 எனக் கொள்க }**

**(அல்லது)**

**(உன் மின்னஞ்சல்முகவரி:** elamaaran@gmail.com / elavanji@gmail.com)

6. **ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்றை எழுதுக.** (6)

அ) முன்னுரை- வள்ளுவர் கூறும் ஒழுக்கம் – ஒழுக்கத்தின் சிறப்பு- ஒழுக்கம் குன்றுவதால் ஏற்படும் இடர்கள் – ஒதுக்க வேண்டியவைகள் – முடிவுரை

ஆ) முன்னுரை- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் – நோய் வரக் காரணம் - நோய்களைப் பெருக்கும் உணவுகள் –இந்தியவை அச்சுறுத்தும் நோய்கள் - தீர்க்கும் முறை - முடிவுரை

இ) முன்னுரை- போக்குவரத்து சிக்கல் - வாகனங்களின் பெருக்கம்- விபத்துகள் நிகழ காரணம் – போக்குவரத்து விதிமுறைகள்- விபத்துகளை ஏற்படாமல் தடுக்கும் முறை – முடிவுரை.

7. **கீழ்க்காணும் படத்தைப் பார்த்து நீ விளங்கிக் கொண்ட கருத்துகளைப் பத்து வரிகளுக்கு மிகாமல் எழுதுக.** **(3)**



8. **கீழ்க்காணும் துணைப்பாட வினாக்களில் ஏதேனும் ஒன்றினை கட்டுரையாக வரைக** **(7)**

அ) புயலிலே ஒரு தோணி.

ஆ) கோபல்லபுரத்து மக்கள்

இ) பாய்ச்சல்.

**பிரிவு – இ இலக்கணம் (SECTION C, 16 MARKS)**

9 . **சான்று தருக. ( நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி)** **(4)**

1. ஒற்றளபெடை

| | |
|---|---|
| அ) எடுப்பதூஉம் | ஆ) மகடூஉ |
| இ) கலங்ங்கு | ஈ) வரனசைஇ |

2. அன்மொழித்தொகை

| | |
|---|---|
| அ) தாயும் சேயும் | ஆ) முறுக்கு மீசை வந்தார் |
| இ) நெருப்புமார்கழித்திங்கள் | ஈ) ஆடுகளம் |

3. எழுவாய்த்தொடர்

| | |
|---|---|
| அ) அப்பா வந்தார் | ஆ) கொடுத்த பணம் |
| இ) கண்டேன் சீதை | ஈ) சாலச்சிறந்த |

4. முன்னிலை வினை

அ) வந்தேன் ஆ) நடந்தாய்

இ) சென்றாள் ஈ) பறந்தன

5. சுட்டு விடை

அ) இங்கே உள்ளது ஆ) நீயே செய்

இ) தலை வலிக்கும் ஈ) வராமல் இருப்பேனா

**10. கூறியவாறு செய்க. (நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி) (4)**

1. மணி – தொடர்மொழியாக மாற்றுக

அ) மணிகள் ஆ) மணிகண்டன்

இ) மணிமேகலை ஈ) மணி வந்தான்

2. நண்பன் – விளித்தொடராக மாற்றுக

அ) நண்பா வா ஆ) வந்தான் நண்பன்

இ) வந்த நண்பன் ஈ) நண்பனை அழைத்தான்

3. மாதவி வந்தான் – வழா நிலையாக மாற்றுக

அ) மாதவி வருகிறான் ஆ) மாதவி வந்தாள்

இ) மாதவி வருவான் ஈ) மாதவி வந்து சென்றான்

4. கோவிலைக் கட்டினான் – வேற்றுமைத் தொடராக்குக

அ) கோவில் கட்டினான் ஆ) கோவிலோடு கட்டினான்

இ) கோவிலுக்குக் கட்டினான் ஈ) கோவிலையே கட்டினான்

5. மாங்காய் பறிப்பாயா? – உறுவது கூறல் விடை தருக

அ) பறிக்காமல் இருப்பேனா ஆ) பறிக்க முடியாது

இ) கை வலிக்கும் ஈ) இதோ பறிக்கிறேன்

**11. இலக்கணக் குறிப்பு தருக. (நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி) (4)**

1. எள்ளாமை

அ) தொழில் பெயர் ஆ) முதனிலைத் தொழில் பெயர்

இ) எதிர்மறைத் தொழில் பெயர் ஈ) வினையாலணையும்

2. கயல் விழி

அ) பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை

இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

3. வந்தேன் வந்தேன் வந்தேன்

அ) வினைமுற்றுத் தொடர் ஆ) வேற்றமைத்தொடர்

இ) பெயரெச்சத் தொடர் ஈ) அடுக்குதெ தொடர்

4. தென்னந்தோப்பு

அ) வழு ஆ) வழாநிலை

இ) வழுவமைதி ஈ) இலக்கணமற்றது

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இலவாழ்க்கை
பண்பும் பயனும் அது

அ) ஆற்று நீர்ப் பொருள்கோள் ஆ) முறை நிரல்நிறை பொருள் கோள்

இ) விற்பூட்டுப் பொருள்கோள் ஈ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

**12. நிரப்புக. ( நான்கு வினாக்களுக்கும் விடையளி) (4)**

1. உயிரளபெடையில் ………………… அளபெடுக்கும்.

அ) நெட்டெழுத்து ஏழும் ஆ) குறில் எழுத்துகள் ஐந்தும்

இ) வல்லினம் ஆறும் ஈ) மெய்யெழுத்து பதினெட்டும்

2. காலம் கடந்த பெயரெச்சமே …………………… எனப்படும்

அ) வேற்றுமைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

3. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது ………………… எனப்படும்.

அ) வேற்றுமைத்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) உரிச்சொல் தொடர்

4. இலக்கண முறையுடன் பிழையின்றி பேசுவதும் எழுதுவதும் …………….
எனப்படும்.

அ) வழு ஆ) வழா நிலை

இ) வழுவமைதி ஈ) மரபு வழுவமைதி

**பிரிவு – ஈ உரைநடை/ செய்யுள் (SECTION D, 22 MARKS)**

**13. கீழ்க்காணும் திருக்குறள்களில் விடுபட்ட சீர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக (4)**

1. ஒழுக்கம் …………. தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

அ) உயர்வை ஆ) விழுப்பம்

இ) மேன்மை ஈ) புகழை

2. ............ திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

அ) முயற்சி ஆ) உழைப்பு

இ) ஒழுக்கம் ஈ) வாய்மை

3. அருமை உடைத்தென் றாசவாமை ..............
பெருமை முயற்சி தரும்

அ) உண்டு ஆ) தோன்றும்

இ) ஆகும் ஈ) வேண்டும்

4. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் ...........

அ) அரசு ஆ) இரவு

இ) பகல் ஈ) சுடும்

**14. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் (12)**

**அ)** மனிதனால் காற்று எவ்வாறு மாசடைகிறது விவரி

**ஆ)** செயற்கை நுண்ணறிவு முதன்மையானது ஏன்?

**இ)** மொழிப்பெயர்ப்பின் பயன்களைடி விரிவாக எழுதுக

**ஈ)** கொழுந்து வகை, பூவின் நிலைகள் ஆகியவற்றின் பெயர்களைத் தொகுத்துஎழுதுக.

**உ)** கரகாட்டத்தை விளக்கி எழுதுக.

**15. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் (6)**

**அ)** பாவலரேறு பெருஞ்சித்தனார் தமிழை எவ்வாறு போற்றுகிறார்?

**ஆ)** காசிக்கண்டம் கூறும் ஒன்பது விருந்தோம்பல் பண்பினை எழுதுக .

**இ)** பெரியாரைத் துணைக்கோடல்அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக

**ஈ)** ஊழிக்காலத்தில் உலகம் எவ்வாறு தேன்றியது?